## சுருக்கம்

பால்வளத்துறை – வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை பிரித்து புதியதாக திருவண்ணாமலை மாவட்டத்திற்கென ஒரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைத்தல் – 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு–13க்கு விலக்களித்து ஆணை வெளியிடப்படுகிறது.

**கால்நடைபராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(பா.உ.2)த் துறை**

**அரசாணை (2டி) எண்.19** **நாள்: 22.08.2019**

திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, ஆவணி. 5

படிக்கப்பட்டவை:

இயக்குநர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்களின் ந.க.எண்.8686/ என்.1/2018, நாள்.11.07.2019.

-----

**ஆணை:**

15.08.2019 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினை பிரித்து புதிதாக திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் துவக்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள் தனது செயற்குறிப்பில், வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை பிரித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியாக ஒரு புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைப்பது என்பது அம்மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையாகும் என்றும், தற்போதுள்ள நிலையில் இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்படுவதால், பால் உற்பத்தியாளர்களின் தேவையினை கண்டறிந்து அனைத்து கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய சேவையை, உரிய நேரத்தில் வழங்குவதில் பெரிதளவு சுணக்கம் ஏற்படுகிறது என்றும் வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை பிரித்து தனியே புதியதாக திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை உருவாக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள் தனது கடிதத்தில், வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை பிரித்து புதிதாக திருவண்ணாமலையில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படும் போது அதன் தலைமையலுவலகம்

திருவண்ணாமலையில் இயங்கும் என்றும், தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அதன் உறுப்பினராக அமைவர் என்றும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மொத்த பால் குளிர்விப்பான் நிலையங்கள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் புதிதாக அமையவிருக்கும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், புதியதாக துவங்கப்பட உள்ள திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய நிர்வாகத்தை கவனிக்க 17 உறுப்பினர்களை கொண்ட ஒரு நிர்வாக குழுவினை கொண்டு செயல்படுத்தலாம் எனவும் ஆறுமாத காலத்திற்குள், கூட்டுறவு சங்க தேர்தல் மூலம் புதிய நிர்வாக குழு உறுப்பினர்களை தேர்வு செய்யலாம் எனவும், புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள திருவண்ணாமலை ஒன்றியத்திற்கு புதிய பால்பண்ணை ஏற்படுத்தும் காலம் வரை தேவையான பாலினை அருகாமையில் உள்ள பால் பண்ணைகள் மூலமாக பதப்படுத்தி கொள்ளலாம் எனவும், மேலும் தேவையான பால் பொருட்களை அருகாமையில் உள்ள ஒன்றியத்திலிருந்து அல்லது இணையத்திலிருந்து பெற்று விற்பனை செய்து இலாபத்தை பெருக்கி கொள்ளலாம் எனவும், மேற்படி புதிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஏற்படுத்துவதால் அரசுக்கு எவ்வித நிதி செலவினமும் ஏற்படாது என்றும் அதன் மூலம் பால் உற்பத்தி, பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை அதிகரிக்கப்படும் என்றும், கிராம பொருளாதரத்தில் நிலையான மற்றும் கனிசமான முன்னேற்றம் ஏற்படும் என்றும் பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் அவர்கள், வேலூர்– திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை பிரித்து, புதிதாக திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைக்க 1983ம் ஆண்டு கூட்டுறவு சட்ட பிரிவு 170ன் கீழ் மேற்படி சட்டம் பிரிவு 13லிருந்து வேலூர்– திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு விலக்கு அளித்து கீழ்க்கண்ட உத்தரவுகளை வழங்குமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

1. 1983ம் ஆண்டு கூட்டுறவு சட்ட பிரிவு 170ன் கீழ் மேற்படி சட்டம் பிரிவு 13லிருந்து வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு விலக்கு அளித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கென புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க அனுமதி அளித்தல்.
2. திருவண்ணாமலை மாவட்டத்திற்கென புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்கப்பட்டவுடன் வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் என பெயர் மாற்றம் செய்ய அனுமதித்தல்.
3. புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட பின்னர் சம்மந்தப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பேரவை கூட்டி பின்னேற்பு ஒப்புதல் பெற அனுமதித்தல்.
4. புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் தற்போது உள்ள நிலையில் அந்த மாவட்டத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் அல்லது வாடகை கட்டிடத்தில் இயங்க அனுமதி அளித்தல்.
5. புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள ஒன்றியத்தின் நிர்வாக பணி மற்றும் பால்பண்ணை பணிகளை ஏற்கனவே பணியில் உள்ள வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்களை கொண்டே மேற்கொள்ள அனுமதித்தல்.